**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.74/2022- DW-2**

| | |
|---|---|
| Name | திரு.ப.ஜெயக்குமார் |
| Father Name | திரு.பஞ்சாட்சரம் |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **02.02.2026.**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:-**

நான் பிரதிவாதியின் கணவர் என்றால் சரிதான். நான் என் மனைவி பெயரிலுள்ள சொத்தை கிரையம் செய்வதாக வாதியுடன் கிரைய ஒப்பந்தப்பத்திரம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. 20.08.2018-ம் தேதி வாதியின் கணவருடன் ஒரு விக்கிரைய ஒப்பந்தம் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து போடும் போது அந்த ஆவணம் என்ன ஆவணம் என்பதை தெரிந்துகொண்டேனா என்றால் நான் என் தங்கையின் கணவர் சந்திரகேசன் என்பவரிடம் கேட்ட போது அந்த ஆவணம் அடமானப்பத்திரம் என சொன்னார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சந்திரகேசன் 2-வது சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். 13.08.2021-ம் தேதி அந்த விக்கிரை ஒப்பந்த ஆவணத்தை ரத்து செய்யும் போது நானும் சார்பதிவாளர் அலுவலகம் சென்றிருந்தேன். அந்த ரத்து பத்திரத்திலும் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். 13.08.2021-ம் தேதி வாதி பவானி பெயரில் மற்றொரு விக்கிரைய ஒப்பந்தப்பத்திரம் பதிவு செய்து கொடுத்தோம் என்றால் வாதியே அந்த ஆவணத்தை தயார் செய்து எங்களிடம் கையொப்பம் பெற்று பதிவு செய்தார். அந்த ஆவணத்திலும் நானும், பிரதிவாதியான என் மனைவியும் கையொப்பம் செய்துள்ளோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் நானும், என் மனைவியும் வாதியிடம் ரூ.10 லட்சம் காசோலை மூலம் பெற்றோம் என்றால் சரிதான். அந்த காசோலைகள் மூலம் எடுத்த ரூ.10 லட்சத்தில் ரூ.5-1/2 லட்சத்தை என் தங்கையின் கணவர் சந்திரகேசனிடம் கொடுத்துவிட்டேன். 13.08.2021-ம் தேதி விக்கிரைய ஒப்பந்தப்பத்திரம் பதிவு செய்த போது ஏற்கனவே நாங்கள் பெற்றிருந்த ரூ.10 லட்சத்துடன் கூடுதலாக அன்றைய தினம் ரூ.6 லட்சம் ரொக்கமாக என் தங்கையின் திருமண செலவிற்காக பெற்றுக்கொண்டுள்ளோம் என்றால் சரியல்ல. என் தங்கைக்கு 15 வருடங்களுக்கு முன்பே திருமணம் முடிந்துவிட்டது. என் தங்கையின் திருமணத்திற்கு தேவைப்படுவதாக சொல்லி ரூ.6 லட்சம் பெற்றுக்கொண்டு பின்னர் அந்த பணத்தை என் மனைவியின் தங்கையின் திருமணத்திற்கு பயன்படுத்தியிருக்கிறேன் என்றால் நாங்கள் பணம்

ரூ.6 லட்சம் வாங்கவில்லை. எந்த வங்கியில் கடன் கேட்டிருந்தோம் என்றால் 5 ஸ்டார் வங்கியில் கடன் கொடுப்பதாக சொன்னார்கள். நானும், என் மனைவியும் வாதியிடம் எங்கள் தேவைக்காக பணத்தை பெற்று வழக்கு சொத்தை கிரையம் செய்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டு தற்போது பொய்யாக அடமானப்பத்திரம் எழுதிக் கொடுத்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மனைவிக்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:-**</u> இல்லை

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.